## 1. தமிழ் அரிச்சுவடியும் தமிழ் எழுத்துகளின் வகைகளும்

### A. தமிழ் அரிச்சுவடி

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ங் | ங | ஙா | .ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | ·னே | னை | னொ | னோ | னௌ |

## B. தமிழ் எழுத்துகளின் வகைகள்

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய் எழுத்துகள் பதினெட்டும், உயிர்மெய் எழுத்துகள் இருநூற்றுப்பதினாறும், ஆய்தம் ஒன்றும் ஆகிய இருநூற்றுநாற்பத்தேழும் சேர்ந்தது. தமிழ் நெடுங்கணக்கு எனப்படும். ஜ, ஸ, ஷ, ஸ்ரீ முதலிய வடவெழுத்துகளும் பயன்படுத்தப்படுகின்றன.

### I. உயிரெழுத்துகள்

அகர முதலிய பன்னிரண்டும் உயிர் போலத் தனித்தியங்க வல்லன. அதனால் அவை உயிர் எழுத்துகள் எனப்பட்டன. அவை ஆவி எனவும் பெயர் பெறும்.

### II. மெய்யெழுத்துகள்

ககர முதலிய பதினெட்டும், உயிரோடு கூடியல்லது இயங்கும் வல்லமை இல்லாத காரணத்தால், அவை மெய்யெழுத்துகள் எனப்பட்டன. அவை உடல், உடம்பு, ஒற்று, புள்ளி எனவும் பெயர் பெறும்.

**குறில்**

உயிரெழுத்துகளுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறுகி ஒலிப் பவை. அதனால் அவை குற்றெழுத்துகள் எனப்படுகின்றன. குற்றெழுத்து குறில் எனவும் சொல்லப்படும்.

**நெடில்**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு எழுத்துகளும் நீண்டு ஒலிப்பவை. அதனால் அவை நெட்டெழுத்துகள் எனப்படுகின்றன. நெட்டெழுத்து நெடில் எனவும் சொல்லப்படும்.

எழுத்துகளை ஒலிப்பதற்கு எடுக்கும் கால அளவு மாத்திரை எனப் படும். ஒரு மாத்திரை என்பது கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப் பொழுது ஆகும். குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று, நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு.

**வல்லின மெய்**

மெய்யெழுத்துகளுள் க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வலிமையான ஓசை உடையவை. ஆதலால் அவை வல்லெழுத்துக்கள் எனப்படும். அவற்றுக்கு வல்லினம், வன்கனம், வலி என்ற பெயர்களும் உண்டு.

**மெல்லின மெய்**

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மென்மையான ஓசை உடையவை. ஆதலால் அவை மெல்லெழுத்துகள் எனப்படும். அவற்றுக்கு மெல்லினம், மென்கணம், மெலி என்ற பெயர்களும் உண்டு.

**இடையின மெய்**

ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் வன்மையாகவோ மென்மையாகவோ அல்லாமல் இடைப்பட்ட ஓசை உடையவை. ஆதலால் அவை இடை யெழுத்துகள் எனப்படும். அவற்றுக்கு இடையினம், இடைக்கணம், இடை என்ற பெயர்களும் உண்டு. மெய்யெழுத்துக்கு மாத்திரை அரை.

### III. உயிர்மெய் எழுத்துகள்

உயிர்மெய் எழுத்துகளை மெய்யெழுத்தின் அடிப்படையில் வல்லின உயிர்மெய், மெல்லின உயிர்மெய், இடையின உயிர்மெய் என மூன்று வகைகளுள் அடக்கலாம்.

| | |
|---|---|
| வல்லின உயிர்மெய் | - 72 |
| மெல்லின உயிர்மெய் | - 72 |
| இடையின உயிர்மெய் | - 72 |
| மொத்தம் | - 216 |

உயிர்மெய் எழுத்துகளை உயிரெழுத்தின் அடிப்படையில் உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில் என இரண்டு வகைகளுள் அடக்கலாம்.

| | |
|---|---|
| உயிர்மெய்க் குறில் | - 90 |
| உயிர்மெய் நெடில் | - 126 |
| மொத்தம் | - 216 |

உயிர்மெய்க் குறில் எழுத்துக்கு மாத்திரை ஒன்று, உயிர்மெய் நெடில் எழுத்துக்கு மாத்திரை இரண்டு.

### IV. ஆய்த எழுத்து

குற்றெழுத்துக்கும் உயிர்மெய் வல்லெழுத்துக்கும் நடுவே மூன்று புள்ளி வடிவினதாய் வரும் ஒரெழுத்தாகும். இது தமிழில் உள்ள ஒரு சிறப்பெழுத்தாகும்.

உ-ம் : அஃறிணை, அஃது, எஃது முதலியன.

ஆய்தவெழுத்துக்கு மாத்திரை அரை.

### சுட்டு எழுத்துக்கள்

அ, இ, உ ஆகிய மூன்றும் சுட்டெழுத்துக்களாகும்.

| | | |
|---|---|---|
| அ | - | அவன், அம்மாடு |
| இ | - | இவன், இம்மாடு |
| உ | - | உவன், உம்மாடு |

### வினா எழுத்துக்கள்

எ, ஏ, ஓ, யா, ஆ ஆகியவை வினா எழுத்துக்களாகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எ | - | எது | ஆ | - | அவனா |
| ஏ | - | ஏது | ஓ | - | அவனோ |
| யா | - | யாது | ஏ | - | அவனே |

### மொழிக்கு முதலில் வராத எழுத்துக்கள்

ட, ண, ன, ர, ல, ழ

உ-ம் :

| | | |
|---|---|---|
| டாம்பு | - | இடாம்பு |
| ராமன் | - | இராமன் |
| லக்குமி | - | இலக்குமி |
| ரங்கன் | - | அரங்கன் |

### மொழிக்கு இறுதியில் வராத எழுத்துக்கள்

க், ச், ட், த், ற், ப், ங்

உ-ம் :

| | | |
|---|---|---|
| சோப் | - | சோப்பு |
| கேற் | - | கேற்று |

## 2. சொற்கள்

### A. ஒரு பொருட் பல சொற்கள்

- கடல் - ஆழி, வேலை, சாகரம்.
- சிங்கம் - அரி, மிருகேந்திரன், கேசரி.
- பாம்பு - அரவம், பணி, கட்செவி
- போர் - அமர், யுத்தம், செரு
- மலை - பருவதம், கிரி, குன்று
- மாலை - ஆரம், கண்ணி, தொடை
- மேகம் - கொண்டல், கார், முகில்
- வாசனை - கந்தம், நாற்றம், விரை
- வில் - சிலை, தநு, சாபம்.
- வேதம் - மறை, சுருதி, ஆரணம்.

## B. பல பொருட் ஒருசொல்

- அரி - சிங்கம், வண்டு, திருமால்.
- ஆலம் - விடம், ஒரு மரம், மழைநீர், அம்புக்கூடு
- கடி - வாசனை, காவல், கடி(த்தல்), சிறப்பு, களிப்பு, அச்சம்
- கண்டம் - கழுத்து, ஆபத்து, நிலப்பெரும் பிரிவு
- கலம் - பாத்திரம், கப்பல், ஆபரணம்.
- சரம் - அம்பு, அசையும்பொருள், பூமாலை
- தாலம் - பனை, நா, பூமி
- பதி - அரசன், இடம், கணவன்
- பார் - பூமி, கற்பாறை, பார்(த்தல்)
- வளை - சங்கு, புற்று, வளைதல்.
- அணி - அலங்காரம், ஆபரணம், ஒழுங்கு, படைப்பிரிவு, அணிதல்.
- அம்பு - கணை, மூங்கில், நீர், மேகம்
- அரங்கம் - நாடகசாலை, சபை, போர்க்களம்.
- ஈரம் - குளிர்ச்சி, அன்பு, கிருபை, பண்பு, அறிவு.
- உரு - உடல், வடிவம், கோபம், நிறம்.
- சுருதி - வேதம், சுதி, இசை, காது.
- சேய் - பிள்ளை, முருகன், சிவப்பு, இளமை

## C. ஒலி வேறுபாடுகள்

### I. லகர, ழகர, ளகர பேத விளக்கம்.

- அலகு - அளவு, கதிர், கூர்மை
- அழகு - கவின், சிறப்பு
- அளகு - அன்னப்பெடை, பெண்மயில், பெண்கோழி
- அலி - நெருப்பு, ஆண் பெண் அல்லாதது
- அழி - கெடு, குலை
- அளி - கொடு, அருள், வண்டு
- அலை - திரி, வருத்து, கடலலை
- அழை - கூப்பிடு, வரவழை
- அளை - தயிர், புற்று
- ஆலி - மழைத்துளி, களி, ஒலி
- ஆழி - கடல், மோதிரம், சக்கரம்
- ஆளி - ஆளுபவன், சிங்கம்
- இலை - தழை
- இழை - செய், ஆபரணம், நூல்
- இளை - மெலி, தளர்
- உலை - அலை, நீரலை, கொல்லன் உலை
- உழை - பிரயாசப்படு, இடம், மான்
- உளை - வருத்து, குதிரையின் பிடரி மயிர், அழுகை
- ஒலி - சத்தம்
- ஒழி - முடித்துவிடு, தவிர்
- ஒளி - மறை, பிரகாசி, வெளிச்சம், விளக்கு
- கலகம் - குழப்பம், சண்டை
- கழகம் - சபை, கல்விபயில் இடம்
- களகம் - நெற்கதிர், பெருச்சாளி

அளி - வண்டு
அளை - தயிர், புற்று

## II. ரகர, றகர பேதச் சொற்கள்.

- அரி - அரிதல், சிங்கம், வண்டு
- அறி - அறிந்துகொள், உணர்
- அலரி - பூமரங்களில் ஒன்று
- அலறி - கதறி
- அரும்பு - மொட்டு, முளை
- அறும்பு - கொடுமை, பஞ்சகாலம்
- ஆர - நிறைய, நுகர.
- ஆற - ஆறுதலடைய
- இரத்தல் - பிச்சை எடுத்தல்
- இறத்தல் - சாதல்
- இரங்கு - கருணைகாட்டு, உருகல்
- இறங்கு - கீழே இறங்கு
- இரும்பு - கரும்பொன்.
- இறும்பு - அதிசயம்
- உரவு - அறிவு, வலிமை
- உறவு - சுற்றம், சேர்க்கை
- ஊரு - அச்சம்.
- ஊறு - இடையூறு
- கரி - அடுப்புக்கரி, யானை
- கறி - கடி, மிளகு
- கரை - ஓரம், தேய், எல்லை
- கறை - மாசு, குற்றம், விஷம், கறுப்பு
- கூரை - வீட்டுக்கூரை
- கூறை - திருமணப்புடவை.
- நிரை - வரிசை
- நிறை - நிறைவு
- பிரை - உறைமோர்
- பிறை - இளஞ்சந்திரன்
- மாரன் - மன்மதன்
- மாறன் - பாண்டியன்
- செரு - சண்டை, போர்
- செறு - கொல்லு, வயல்
- தேரல் - ஆராய்தல்.
- தேறல் - தேன்

## III. னகர, ணகர பேத விளக்கம்.

- அனையார் - அல்லாமை.
- அணையார் - பகைவர்
- அன்மை - அல்லாத
- அண்மை - சமீபம்
- ஆனம் - தெப்பம், மரக்கலம்
- ஆணம் - குழம்பு, அன்பு.
- இனி - இப்பால், பின்னால்.
- இணி - தளை, அணி, எல்லை.
- உன்னல் - நினைத்தல்.
- உண்ணல் - சாப்பிடுதல்.
- ஊன் - மாமிசம்
- ஊண் - உணவு
- கனப்பு - பருமை.
- கணப்பு - சூடு.
- கனம் - பெரியாரைக் கனம் பண்ணு.
- கணம் - இறைவனே! நான் உன்னை ஒருகணமும் பிரியாதிருக்க வரந்தருவாய்.
- கனி - காய்கனியுண்டு நோய்பிணியகற்று, பழு, இளகு, பழம்
- கணி - நம் முன்னோர் நிழலைக்கொண்டு நேரங் கணித்தனர், மதி, எண்ணு.
- கன்னி - கன்னிப்பெண்ணாயிருக்கும்போதே குந்தி கர்ணனைப் பெற்றாள்.
- கண்ணி - குறவர் கண்ணிவைத்துப் பறவை பிடிப்பர்.
- பனி - வெயில் முன் பனித்துளி நில்லாது.
- பணி - துரியோதனனைப் பணிக்கொடியோன் என்பர்.
- வன்மை - திறமையான பேச்சாளர் தங்கள் பேச்சு வன்மையால் மக்கள் மனத்தைக் கவருகின்றனர்.
- வண்மை - வள்ளல் பாரி வண்மையிற் சிறந்தவன்.

## D. எதிர்க்கருத்துச் சொற்கள்

♦ அருமை - எளிமை
♦ அருள் - மருள்
♦ அடி - முடி
♦ அச்சம் - துணிவு
♦ அநுகூலம் - பிரதிகூலம்
♦ அமிலம் - காரம்
♦ அகலம் - ஒடுக்கம்
♦ அகங்கை - புறங்கை
♦ அணுகல் - விலகல்
♦ அட்சரம் - நிரட்சரம்
♦ அஞ்சனம் - நிரஞ்சனம்
♦ அட்சம் - நிரட்சம்
♦ அந்தம் - அநந்தம்
♦ ஆதி - அநாதி, அந்தம்
♦ ஆதரவு - அநாதரவு
♦ ஆசை - நிராசை
♦ ஆயுதன் - நிராயுதன்
♦ ஆரோகணம் - அவரோகணம்
♦ ஆதாரம் - நிராதாரம்
♦ ஆலம் - அமுதம்
♦ ஆயாசம் - அநாயாசம்
♦ ஆயுதன் - நிராயுதன்
♦ ஆண்டான் - அடிமை
♦ ஆட்சேபித்தல் - ஆமோதித்தல்
♦ ஆணவம் - அடக்கம்
♦ இரகசியம் - பரகசியம்
♦ இணக்கம் - பிணக்கம்
♦ இணை - தனி
♦ இகழ் - புகழ்
♦ இலட்சணம் - அவலட்சணம்
♦ இன்னார் - இனியார்
♦ இச்சை - அநிச்சை
♦ களவியல் - கற்பியல்
♦ கதி - நிர்க்கதி
♦ கிரமம் - அக்கிரமம்
♦ குணன் - நிர்க்குணன்
♦ குறைவு - நிறைவு
♦ சரம் - அசரம்
♦ சகுனம் - அபசகுனம்
♦ சிந்தை - நிர்ச்சிந்தை
♦ சீதளம் - வெப்பம்
♦ சுலபம் - துர்பலம்
♦ சுரர் - அசுரர்
♦ பக்கம் - விபக்கம்
♦ புணர்ச்சி - பிரிவு
♦ பூரணம் - அபூரணம்
♦ உம்பர் - இம்பர்
♦ உத்தமன் - அதமன்
♦ உலோபம் - வள்ளன்மை.
♦ உற்சாகம் - சோர்வு
♦ உடன்பாடு - மறுப்பு
♦ உருவம் - அருவம்
♦ உசிதம் - அநுசிதம்
♦ ஊடல் - கூடல்
♦ இன்சொல் - வன்சொல்
♦ ஈரம் - வரட்சி
♦ ஈரமான - உலர்ந்த
♦ உபகாரம் - அபகாரம்
♦ உத்தமன் - அநுத்தமன்
♦ ஊர்தல் - விரைதல்
♦ ஊன்றுதல் - பிடுங்குதல்
♦ ஏறு - இறங்கு
♦ ஏகம் - அநேகம்
♦ ஏராளம் - குறைவு
♦ ஏளனம் - புகழ்ச்சி
♦ ஐது - செறிவு
♦ ஐயம் - தெளிவு, தேற்றம்
♦ ஒறுப்பு - மலிவு
♦ ஒளி - இருள்
♦ ஒற்றுமை - வேற்றுமை
♦ ஒட்டுதல் - வெட்டுதல்
♦ ஒத்துழை - ஒதுங்கு
♦ ஓங்குக - ஆழ்க, வீழ்க
♦ கங்குல் - பகல்
♦ கண்டம் - அகண்டம்
♦ களங்கம் - நிட்களங்கம்
♦ கலக்கம் - தெளிவு
♦ கனவு - நனவு
♦ கர்வம் - பணிவு
♦ காய்தல் - உவத்தல்
♦ கீர்த்தி - அபகீர்த்தி
♦ குறுக்கம் - விரிவு
♦ கேடு - ஆக்கம்
♦ சத்தியம் - அசத்தியம்
♦ சாதாரணம் - அசாதாரணம்
♦ சீரணம் - அசீரணம்
♦ சீலன் - குசீலன்
♦ சுத்தம் - அசுத்தம்
♦ பக்குவம் - அபக்குவம்
♦ பாலர் - விருத்தர்
♦ புராதனம் - நவீனம்
♦ யுக்தி - குயுக்தி

| | | | |
|---|---|---|---|
| ♦ நுண்மை | - பருமை | ♦ மடமை | - புலமை |
| ♦ மருட்சி | - தெருட்சி | ♦ மலம் | - நிர்மலம் |
| ♦ மரியாதை | - அவமரியாதை | ♦ மருள் | - தெருள் |
| ♦ மானம் | - அவமானம் | ♦ மெய்ம்மை | - பொய்ம்மை |
| ♦ தர்க்கம் | - குதர்க்கம் | ♦ தந்திரம் | - அவதந்திரம் |
| ♦ திண்மை | - நொய்ம்மை | ♦ தேகம் | - விதேகம் |
| ♦ தேசம் | - விதேசம் | ♦ தொகை | - விரி |
| ♦ யோகம் | - வியோகம் | ♦ ஞானம் | - அஞ்ஞானம் |
| ♦ விசாரம் | - நிர்விசாரம் | ♦ விகற்பம் | - நிர்விகற்பம் |
| ♦ நம்பிக்கை | - அவநம்பிக்கை | ♦ நியாயம் | - அநியாயம் |
| ♦ நீதி | - அநீதி | ♦ வாழ்வு | - தாழ்வு |

## E. பெயராகவும், வினையாகவும் வழங்கும் சொற்கள்

| சொல் | பெயர் | வினை |
|---|---|---|
| ♦ அகல் | விளக்குத்தகழி | அகல், நீங்கு |
| ♦ அடி | பாதம் | அடி |
| ♦ அடை | வெற்றிலை | சேருதல் |
| ♦ அணி | ஆபரணம் | அலங்கரி |
| ♦ அணை | மெத்தை | தழுவு |
| ♦ அமர் | போர் | உட்காரு |
| ♦ அமை | மூங்கில் | அடங்கு |
| ♦ அரி | சிங்கம் | அரி - (வெட்டு) |
| ♦ அரை | கிடைப்பாகம் (பாதி) | அரை |
| ♦ அலை | கடலலை | அலை - (திரிதல்) |
| ♦ அவி | தேவருணவு | அவி-(பிட்டவித்தல்) |
| ♦ ஆடு | ஒரு பிராணி | ஆடு-(நடனமாடுதல்) |
| ♦ ஆள் | மனிதன், நபர் | அரசாட்சி செய் |
| ♦ ஆறு | நதி, வழி | இளைப்பாறு |
| ♦ இடி | இடி | இடித்தலைச்செய் |
| ♦ இரை | உணவு | ஒலிசெய் |
| ♦ உடு | நட்சத்திரம் | உடுத்து (தரி) |
| ♦ உடை | ஆடை | சிதை, அழி |
| ♦ உரை | சொற்பொருள் | கூறு |
| ♦ ஊர் | கிராமம் | ஊர்ந்துசெல் |
| ♦ எண் | இலக்கம் | நினை |
| ♦ எரி | நெருப்பு | எரித்தலைச்செய் |
| ♦ ஏறு | இடபம், ஆண்சிங்கம் | ஏறு-(ஏணியிலேறு) |
| ♦ ஒளி | பிரகாசம் | மறைந்திரு |
| ♦ ஓடு | கூரை ஓடு | ஓடு (வேகமாகஓடு) |
| ♦ கரை | ஓரம் | கரைத்தல் |
| ♦ கலை | ஆண்மான் | பிடி |
| ♦ குடி | குடும்பம் | பருகு |
| ♦ சூடு | வெப்பம் | சூடு (மாலைசூடு) |
| ♦ செல் | கறையான் | போ |
| ♦ சோதி | பிரகாசம் | தேர்வுசெய் |

| | | | |
|---|---|---|---|
| ♦ | திரி | விளக்குத் திரி | சுற்றித்திரி |
| ♦ | தை | மாதம் | தைத்தல் |
| ♦ | நிரை | பசுக்கூட்டம் | வரிசை |
| ♦ | நொடி | நேரத்தைக்குறித்தல் | நொடித்தல் |
| ♦ | பதி | தலைவன் | பதியம்பண்ணு |
| ♦ | பிணை | பெண்மான் | சுட்டு |
| ♦ | பொறி | கருவி | பொறித்தலைச்செய் |
| ♦ | மதி | சந்திரன் | மரித்தலைச்செய் |
| ♦ | மாறு | விளக்குமாறு | வேறுபாடு, நீங்கு |
| ♦ | முடி | கிரீடம் | முடிவுசெய் |
| ♦ | மெழுகு | மெழுகு | மெழுகிடு |

## F. எதிர்ப்பால் சொற்கள்

| ஆண்பால் | | பெண்பால் |
|---|---|---|
| ♦ ஆயன் | - | ஆய்ச்சி |
| ♦ ஐயன் | - | ஐயை |
| ♦ சீமான் | - | சீமாட்டி |
| ♦ தந்தை | - | தாய் |
| ♦ தோழன் | - | தோழி |
| ♦ பாலன் | - | பாலிகை |
| ♦ மாமன் | - | மாமி |
| ♦ வேடன் | - | வேடுவிச்சி |
| ♦ ஈசன் | - | ஈசுவரி |
| ♦ தம்பி | - | தங்கை |
| ♦ தேவன் | - | தேவி |
| ♦ வீரன் | - | வீராங்கனை |
| ♦ அழகன் | - | அழகி |
| ♦ ஆடவன் | - | பெண்டு |
| ♦ ஒருவன் | - | ஒருத்தி |
| ♦ கணவன் | - | மனைவி |
| ♦ குமாரன் | - | குமாரி |
| ♦ சிறுவன் | - | சிறுமி |
| ♦ செவிடன் | - | செவிடி |
| ♦ தமிழன் | - | தமிழிச்சி |
| ♦ நண்பன் | - | நண்பி |
| ♦ பாதகன் | - | பாதகி |
| ♦ பெருமான் | - | பெருமாட்டி |
| ♦ முடவன் | - | முடத்தி |
| ♦ இடையவன் | - | இடைச்சி |
| ♦ கனவான் | - | கனவதி |
| ♦ குருடன் | - | குருடி |
| ♦ தலைவன் | - | தலைவி |
| ♦ புருஷன் | - | மனைவி |
| ♦ திருடன் | - | திருடி |

| ஆண்பால் | | பெண்பால் |
|---|---|---|
| ♦ ஆடுஉ | - | மகடுஉ |
| ♦ குரு | - | குருபத்தினி |
| ♦ செட்டி | - | செட்டிச்சி |
| ♦ தாசன் | - | தாசி |
| ♦ நம்பி | - | நங்கை |
| ♦ பிரான் | - | பிராட்டி |
| ♦ யுவன் | - | யுவதி |
| ♦ மகன் | - | மகள் |
| ♦ கூனன் | - | கூனி |
| ♦ பாணன் | - | பாடினி |
| ♦ பேரன் | - | பேத்தி |
| ♦ பிதா | - | மாதா |
| ♦ அரசன் | - | அரசி |
| ♦ உழவன் | - | உழத்தி |
| ♦ கள்வன் | - | கள்ளி |
| ♦ கிழவன் | - | கிழவி |
| ♦ குணவன் | - | குணவதி |
| ♦ சீமான் | - | சீமாட்டி |
| ♦ சேவகன் | - | சேவகி |
| ♦ நடிகன் | - | நடிகை |
| ♦ பாட்டன் | - | பாட்டி |
| ♦ மருகன் | - | மருகி |
| ♦ மருமகன் | - | மருமகள் |
| ♦ மூதாதை | - | மூதாட்டி |
| ♦ எசமான் | - | எசமாட்டி |
| ♦ குமரன் | - | குமரி |
| ♦ செல்வன் | - | செல்வி |
| ♦ நாயகன் | - | நாயகி |
| ♦ மாணவன் | - | மாணவி |
| ♦ வாலிபன் | - | வாலை |

- உபாத்தியன் - உபாத்தியாயினி
- சகோதரன் - சகோதரி
- பண்டிதன் - பண்டிதை
- பார்ப்பனன் - பார்ப்பனி
- புதல்வன் - புதல்வி
- மணவாளன் - மணவாட்டி
- மாணாக்கன் - மாணாக்கி
- மைத்துனன் - மைத்துனி
- காவற்காரன் - காவற்காரி
- திருவாளன் - திருவாட்டி
- பாக்கியவான் - பாக்கியவதி
- பிராமணன் - பிராமணத்தி
- புண்ணியவான் -புண்ணியவதி
- மருத்துவன் - மருத்துவச்சி
- மித்திரன் - மித்திரை
- வேலைக்காரன் - வேலைக்காரி

## 3. இணைமொழிகள், இரட்டை மொழிகள், அடுக்குத் தொடர்கள்

### A. இணைமொழிகள்

இரண்டு சொற்கள் இணைந்து ஒரு பொருளை உணர்த்துமிடத்து, அத்தொடர்கள் இணைமொழிகள் எனப்படுகின்

**தொகுதி 1**

- அரைகுறை
- அருமை பெருமை
- அண்டை அயலார்
- அணை துணை
- அற்ப சொற்பம்
- அக்கம் பக்கம்
- ஆசாபாசம்
- ஆற அமர
- ஆறித்தேறி
- ஆட்ட ஓட்டம்
- இளைத்துக் களைத்து
- ஈ விரக்கம்
- ஈடும் எடுப்பும்
- உருவும் திருவும்
- உருண்டு திரண்டு
- ஊணுடை
- ஊணுறக்கம்
- ஒளிப்புமறைப்பு
- ஓட்டமும் நடையும்
- கண்ணீரும் கம்பலையும்
- கரடு முரடு
- கள்ளங்கபடம்
- சந்து பொந்து
- மூலை முடுக்கு
- வழிதுறை

**தொகுதி 2**

- அறமும் மறமும்
- அல்லும் பகலும்
- ஆதி, அந்தம்
- இன்ப துன்பம்
- இராப்பகல்
- இன்னார் இனியார்
- உயர்வு தாழ்வு
- ஏற்ற இறக்கம்
- ஏற்றத்தாழ்வு
- சுக துக்கம்
- மலையும் மடுவும்
- கொடுக்கல் வாங்கல்
- தொகுத்து வகுத்து
- வானகமும் வையகமும்
- விண்ணும் மண்ணும்

(தொகுதி ஒன்றில் உள்ளவை ஒரே கருத்தைத் தரும் சொற்களை கொண்டவையாகும்.)

(தொகுதி இரண்டில் உள்ளவையோ முரணான கருத்தைத் தரும் சொற்களைக் கொண்டவையாகும்.

### B. இரட்டை மொழிகள்

ஓர் அடிச்சொல் இரட்டித்து நின்று பொருள் தருமிடத்து அது இரட்டை மொழி அல்லது இரட்டைக்கிளவி எனப்படும். இரட்டித்து நிற்கும் போது உணர்த்தும் பொருளைப் பிரிந்து நிற்கும் போது தருவதில்லை.

சில இரட்டை மொழிகள் இசை (ஓசை) பற்றிய பொருள் உணர்த்துவதாக அமையும்.
உ-ம் : கடகட, சலசல

சில இரட்டை மொழிகள் பண்பு பற்றிய பொருள் உணர்த்துவதாக அமையும்.
உ-ம் : மொறுமொறு, கடுகடு, முணுமுணு, கசகச, பரபர

இரட்டை மொழிகள் வாக்கியங்களில் வினைகளாயும் வினையடியாக எழுந்த பெயர்களாயும், வினையெச்சங்களாயும், பெயரெச்சங்களாயும் அமையும்.

### C. அடுக்குத் தொடர்கள்

ஒரு சொல் உணர்த்தும் பொருளை அழுத்தமாகக் கூறுவதற்கு அச் சொல் அடுக்கி வருவது அடுக்குத்தொடர் எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஓடஓட | ஊர்ஊர் | விடியவிடிய | சுடச்சுட | மேலேமேலே |
| குமுறிக்குமுறி | உயரஉயர | மணிமணி | அணுஅணு | வெட்டவெட்ட |
| குட்டக்குட்ட | விழுந்துவிழுந்து | | | |

## 4. வடசொற்களும் பிறமொழிச்சொற்களும்

### A. வடமொழிச்சொற்கள்

| வடமொழி | | தமிழ் |
|---|---|---|
| ♦ அகங்காரம் | - | செருக்கு. |
| ♦ அசலம் | - | உறுப்பு |
| ♦ அதிருஷ்டம் | - | ஆகூழ், நற்பேறு |
| ♦ அதிபர் | - | தலைவர் |
| ♦ அந்தரங்கம் | - | மறைவு |
| ♦ அநாவசியம் | - | வேண்டாதது |
| ♦ அபாயம் | - | இடர் |
| ♦ அபிஷேகம் | - | திருமுழுக்கு |
| ♦ அமிசம் | - | கூறுபாடு |
| ♦ அர்த்தநாரி | - | உமைபாகன் |
| ♦ அர்த்தம் | - | பொருள் |
| ♦ அர்ப்பணம் | - | படையல் |
| ♦ அலட்சியம் | - | புறக்கணிப்பு |
| ♦ அவஸ்தை | - | நிலை, தொல்லை |
| ♦ அற்புதம் | - | புதுமை |
| ♦ அனுமதி | - | இசைவு |
| ♦ அக்கிரமம் | - | முறைக்கேடு |
| ♦ அசூயை | - | பொறாமை |
| ♦ அதிருப்தி | - | மனக்குறை |
| ♦ அத்தியாவசியம் | - | இன்றியமையாதது |
| ♦ அநேகம் | - | பல |
| ♦ அபகரி | - | பறி, கைப்பற்று |
| ♦ அபிப்பிராயம் | - | கருத்து |
| ♦ அபூர்வம் | - | புதுமை |
| ♦ அயோக்கியன் | - | நேர்மையற்றவன் |
| ♦ அர்த்த புஷ்டியுள்ள | - | பொருள் செறிந்த |

### B. பிறமொழிச்சொற்கள்

- **போர்த்துக்கேய மொழிச் சொற்கள்**
  கடுதாசி, கரத்தை, சப்பாத்து, வாங்கு, அன்னாசி, அலுமாரி.
- **ஒல்லாந்த மொழிச் சொற்கள்**
  இலாச்சி, கந்தோர், கேத்தில், நொத்தாரிசு, தோம்பு, சாக்கு.
- **பிரான்சிய மொழிச் சொற்கள்**
  குசினி, பீரோ, இலாந்தர், துருப்பு, பட்டாளம்
- **அரபு மொழிச் சொற்கள்**
  வசூல், இலாகா (திணைக்களம்), தகவல், சைத்தான்.
- **மராட்டி மொழிச் சொற்கள்**
  அட்டவணை, அபாண்டம், குண்டான், பட்டாணி, சாம்பார், வில்லங்கம்.
- **பாரசீக மொழிச் சொற்கள்**
  சமுக்காளம், முலாம், சிப்பந்தி, சுமார், சால்வை, துப்பாக்கி.
- **பாளி மொழிச் சொற்கள்**
  விகாரை, துக்கம், சீலம், பிக்கு, தூபி, போதி
- **ஆங்கில மொழிச் சொற்கள்**
  பென்சில், விசுக்கோத்து, மைனர், மைல், ஏக்கர், சினிமா, தார்
- **கன்னட மொழிச் சொற்கள்**
  அட்டிகை, சமாளித்தல், சொத்து.
- **உருது மொழிச் சொற்கள்**
  அசல், ஆசாமி, அமுல், அலாதி இராஜினாமா.
- **தெலுங்கு மொழிச் சொற்கள்**
  இடாப்பு, இராணுவம், இனாம், இலஞ்சம்.
- **மலையாள மொழிச் சொற்கள்**
  தளபாடம், கொச்சி, கச்சவடம்.
- **சிங்கள மொழிச் சொற்கள்**
  பன்சலை, முருங்கை.
- **இந்தி மொழிச் சொற்கள்**
  ஆசாமி, பேட்டி, சிபார்சு.

## 5. மரபுத் தொடர்களும் பழமொழிகளும்

### A. மரபுத் தொடர்கள்

மரபுத்தொடர்களும் அவைகளின் இலக்கணப் பொருள்களும்.

1. அடி பற்றிய மரபுத்தொடர்கள்

| | | |
|---|---|---|
| அடிநகர்தல் | - | இடம்பெயர்தல் |
| அடிப்படுத்தல் | - | வெற்றிகொள்ளல் |
| அடிபிடித்தல் | - | குறிப்பின்வழிச் செல்லல் |
| அடிபிறக்கிடல் | - | தோற்றோடல் |
| அடிவிளக்குதல் | - | தன்மரபைப் புகழ்பெறச் செய்தல் |
| அடியொற்றுதல் | - | பின்பற்றுதல் |
| அடிப்படை | - | மூலாதாரம் |
| அடியிடுதல் | - | ஆரம்பித்தல் |

2. **கண் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கண்கலத்தல் | - | ஒருவரை ஒருவர் விரும்புதல் |
| கண்டு கழித்தல் | - | அனுபவித்தல், வெறுத்தல் |
| கண்ணறுதல் | - | அன்பு குறைதல் |
| கண்ணுதல் | - | அருமையாதல் |
| கண்விடல் | - | துவாரம் உண்டாதல் |
| கண்மூடித்தனம் | - | அவதானமின்மை |
| கண்திறத்தல் | - | அறிவு உண்டாதல் |
| கண்ணெறிதல் | - | கடைக்கண்ணாற் பார்த்தல் |
| கண் மூடுதல் | - | இறத்தல் |

3. **கழுத்துப் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கழுத்திற் கட்டுதல் | - | வலிந்து கொடுத்தல் |
| கழுத்துக் கொடுத்தல் | - | பிறரின் துன்பத்தின்போது உதவி செய்தல். |
| கழுத்தை முறித்தல் | - | வருத்துதல் |
| கழுத்தறுத்தல் | - | தீமை செய்தல் |
| கழுத்ததைக் கட்டுதல் | - | விடாது நெருக்குதல் |

4. **காது பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| காதிலடிபடுதல் | - | செய்தி பரவுதல் |
| காது குத்தல் | - | ஏமாற்றுதல் |
| காதைக்கடித்தல் | - | மறைபொருள் சொல்லல் |
| காதிலோதுதல் | - | கோள் சொல்லுதல் |
| காது கொடுத்தல் | - | அவதானித்தல் |

5. **கால் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கால் கிளர்தல் | - | ஓடுதல் |
| கால் சாய்தல் | - | கெடுதல் |
| கால் பின்னுதல் | - | தடைப்படல் |
| காலைச் சுற்றுதல் | - | தொடர்ந்து பற்றுதல் |
| காலாறுதல் | - | ஓய்ந்திருத்தல் |
| கால் கொள்ளுதல் | - | ஆரம்பித்தல் |
| கால்பிடித்தல் | - | காலைப்பற்றிக் கெஞ்சுதல் |
| காலூன்றுதல் | - | நிலைபெறுதல் |

6. **கை பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| கை காட்டுதல் | - | திறமையை வெளிப்படுத்தல் |
| கை கொடுத்தல் | - | துன்பத்தில் உதவி செய்தல் |
| கை தலைவைத்தல் | - | பெருநட்டம் அடைதல் |
| கையறுதல் | - | வருந்துதல் |
| கையைக் கட்டுதல் | - | முயற்சி செய்யாதபடி தடுத்தல் |
| கை கழுவுதல் | - | முற்றாய் விலகுதல் |
| கை கூடல் | - | அநுகூலமாதல் |
| கையிடல் | - | ஆரம்பித்தல் |
| கை தளர்தல் | - | வறுமையுறல் |
| கை கொடுத்தல் | - | உதவி செய்தல் |

7. செவி பற்றிய மரபுத்தொடர்கள்

செவிசாய்த்தல் - இணங்கிக்கேட்டல்
செவிப்படுதல் - கேட்கப்படுதல்
செவியறிவுறுத்தல் - நல்லறிவு கூறுதல்
செவி கொடுத்தல் - கவனித்துக் கேட்டல்
செவிக்கேறுதல் - கேட்பதற்கு இனிமையாக இருத்தல்

8. தலை பற்றிய மரபுத்தொடர்கள்

தலைகீழாய் நடத்தல் - முறை தவறி நடத்தல்
தலைகீழாய் நிற்றல் - பிடிவாதம் கொள்ளல், செருக்குடன் நடத்தல்.
தலையளி செய்தல் - முகம் மலர்ந்து இன்சொல் கூறுதல்.
தலையால் நடத்தல் - முறைதவறி நடத்தல்
தலையைத் தடவுதல் - சிந்தனை செய்தல்
தலைதடுமாற்றம் - பெருங்குழப்பம்
தலைப்படுத்தல் - மேற்கொள்ளுதல்
தலைமறைதல் - ஒளிந்திருத்தல்

9. நாக்கு பற்றிய மரபுத்தொடர்கள்

நாக்கு அசைதல் - வாய் திறந்து சொல்லுதல்
நாக்குப் புரளுதல் - தவறுதல்
நாக்கு வளைத்தல் - பழித்தல்
நாக்கு விழுதல் - பேச நாவெழாமற் போதல்
நாக்குத் தவறுதல், நாக்குத் தப்பல் - பேச்சுறுதி தவறுதல், பொய் சொல்லுதல்

10. பல் பற்றிய மரபுத்தொடர்கள்

பல்லிளித்தல் - ஏளனஞ் செய்தல்
பல்லுக்கடித்தல் - துன்பந்தரும் ஒன்றைச் சகித்துக் கொண்டிருத்தல்.
பல்லைக்காட்டுதல் - இரந்து வேண்டல்.
பல்லைப் பிடுங்குதல் - சக்தியை அடக்குதல்

11. முகம் பற்றிய மரபுத்தொடர்கள்

முகம் கொள்ளுதல் - விரும்புதல்
முகம் புகுதல் - எதிர்சென்று நிற்றல்
முகமாதல் - உடன்படல்
முகத்திலடித்தல் - நேரே நிந்தித்தல்
முகந்தருதல் - அன்பு காட்டல்
முகங்கொடுத்தல் - இன்முகங் காட்டுதல்
முகமுறிதல் - மனம் நோகல்
முகம் பார்த்தல் - இரக்கங்காட்டுதல் அன்புகாட்டுதல்

12. வயிறு பற்றிய மரபுத்தொடர்கள்

வயிறுகடித்தல் - பசியுண்டாதல்
வயிறு கழுவுதல் - அரும்பாடுபட்டு வாழுதல்
வயிறு வாய்த்தல் - மகப்பேறு
வயிற்றிலடித்தல் - சீவனத்தைக் கெடுத்தல்
வயிறு வளர்த்தல் - எவ்வாறோ பிழைத்துக்கொள்ளல்
வயிறு கிள்ளுதல் - பசி உண்டாதல்
வயிறு குளிர்தல் - திருப்தியடைதல்
வயிறெரிதல் - பொறாமை கொள்ளுதல்

13. **வாய் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| வாய்திறத்தல் | - | பேசத் தொடங்குதல் |
| வாய்பூட்டுப்போடல் | - | பேசாது தடுத்தல் |
| வாய்மூத்தல் | - | அடக்கமின்றிப் பேசுதல் |
| வாய்விடுதல் | - | வெளிப்படையாகக் கேட்டல் |
| வாய்விடுதல் | - | வெளிப்படையாகக் கேட்டல் |
| வாய் புலம்பல் | - | பிதற்றுதல் |
| வாயில் மண் போடுதல் | - | கேடு விளைவித்தல் |

14. **வால் பற்றிய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| வாலாட்டுதல் | - | சேட்டை பண்ணுதல் |
| வால் முளைத்தல் | - | உலகம் பிடிபடல் |
| வால்கட்டுதல் | - | முகமன் கூறிக்கிளப்பி விடுதல் |
| வால்பிடித்தல் | - | சலுகைபெறும் எண்ணத்துடன் பின்னால் திரிதல் |
| வால் கட்டுதல் | - | வாயில் மண் போடுதல் |
| வாலைக் கீழே போடுதல் | - | பணிந்து போதல் |

15. **தோள் பற்றிய மரபுத் தொடர்**

| | | |
|---|---|---|
| தோளிலிருந்து செவி கடித்தல் | - | ஆதரிப்பவரை வஞ்சித்தல் |
| தோள் கொடுத்தல் | - | துணை செய்தல் |
| தோள் மாற்றுதல் | - | பிறர் சுமையைத் தான் சுமத்தல் |

16. **ஏனைய மரபுத்தொடர்கள்**

| | | |
|---|---|---|
| ஆட்கொள்ளுதல் | - | அடிமையாகக் கொள்ளுதல் |
| குடிமுழுகிப் போதல் | - | முற்றும் அழிதல். |
| துறைபோதல் | - | ஐயந்திரிபறக் கற்றல் |
| தொழுகள்வன் | - | ஏமாற்றுக்காரன் |
| முதலைக்கண்ணீர் | - | பொய் இரக்கம் |
| அவசரக்குடுக்கை | - | பதற்றக்காரன் |
| ஆழம்பார்த்தல் | - | ஒருவனறிவு முதலியவற்றை ஆராய்தல். |
| இலைமறைகாய் | - | மறைபொருள் |
| உப்பில்லாப் பேச்சு | - | பயனற்ற உரையாடல் |
| எடாதவெடுப்பு | - | தகாத செயல் |
| ஒற்றைகாலில் நிற்றல் | - | விடாப்பிடியாய் நிற்றல் |
| கங்கணம் கட்டுதல் | - | செயலை முடிக்க முனைந்து நிற்றல். |
| கசகரணம் போடுதல் | - | பெருமுயற்சி செய்தல் |
| கல்லில் நாருரித்தல் | - | இல்லாத பொருளைப் பெறமுயலுதல். |
| சீட்டுக் கொடுத்தல் | - | வேலையினின்றும் விலக்கல் |
| தூண்டில் போடுதல் | - | தன்வயப்படுத்தல் |
| நட்டாற்றில் விடுதல் | - | ஆபத்திற் கைவிடுதல் |
| அரை கூவல் | - | போருக்கு அழைத்தல் |
| அரை மனிதன் | - | மதிப்பில்லாதவன் |
| ஆறப்போடுதல் | - | காலம் தாழ்த்துதல் |
| இடித்துரைத்தல் | - | வற்புறுத்திக் கூறல் |
| இனிப்புக் காட்டுதல் | - | ஆசை உண்டாக்குதல். |
| இடங்கொடுத்தல் | - | கண்டிப்பின்றி நடத்தல். |
| உருக்குலைதல் | - | உடல் மெலிதல் |
| உச்சி குளிர்தல் | - | மிக மகிழ்தல் |

| | | |
|---|---|---|
| உலை வைத்தல் | - | அழிவு வருவித்தல் |
| எடுத்தெறிதல் | - | அலட்சியம் பண்ணுதல் |
| ஒத்துப்பாடுதல் | - | ஆதரவு கொடுத்தல் |
| ஓடெடுத்தல் | - | பிச்சையெடுத்தல் |
| ஓடியாடிப் பார்த்தல் | - | முடிவு காணல் |
| கட்டியடித்தல் | - | வலிந்து சுமத்தல் |
| கறுவுறுத்தல் | - | முற்றாய் அழித்தல் |
| கதைக்கட்டுதல் | - | பொய் செய்தியைப் பரப்புதல் |
| கரைத்துக் குடித்தல் | - | முற்றாய்க் கற்றல் |
| கசக்கிப் பிழிதல் | - | வருத்தி வேலை வாங்குதல் |
| கடன் கழித்தல் | - | மனமின்றிச் செய்தல் |
| காலூன்றுதல் | - | நிலைத்திருத்தல் |
| காற்றாய்ப்பறத்தல் | - | விரைந்து செல்லுதல் |
| குட்டிச் சுவராகுதல் | - | கெட்டழிந்து போதல் |
| கை கண்ட மருந்து | - | சிறந்த வழி |
| கொள்ளி செருகுதல் | - | கேடு செய்தல் |
| சந்தியில் நிற்றல் | - | ஆதரவின்றி நிற்றல் |
| சிறகு கட்டிப்பறத்தல் | - | கற்பனை செய்தல் |
| சிட்டாய்ப் பறத்தல் | - | விரைந்தோடிப் போகுதல் |
| துண்டு விழுதல் | - | பற்றாக்குறை ஏற்படுதல் |
| பம்பரமாட்டுதல் | - | அலைக்கழித்தல் |
| பிஞ்சிற் பழுத்தல் | - | வயதுக்கு மீறிய செயற்பாடு |
| புண்படுத்தல் | - | மனம் நோகப் பேசுதல் |
| பூசி மெழுகுதல் | - | குற்றத்தை மறைத்தல் |
| பொடி வைத்தல் | - | தந்திரமாகப் பேசுதல் |
| திக்குமுக்காடுதல் | - | செய்வதறியாது துன்பப்படுதல் |
| வழிப்பார்த்தல் | - | உபாயந்தேடுதல் |
| விழலுக்கிறைத்த நீர் | - | முயற்சி வீணாகுதல் |
| வெட்டிப்பேசுதல் | - | மறுத்துப் பேசுதல் |
| மட்டந்தட்டுதல் | - | அவமரியாதை செய்தல் |
| மண்ணாக்குதல் | - | வீணாக்குதல் |
| மொட்டையடித்தல் | - | முழுவதும் அபகரித்தல் |
| நெருப்பெடுத்தல் | - | கோபித்தல் |
| அரைப்படிப்பு | - | நிரம்பாத கல்வி |
| அள்ளியிறைத்தல் | - | மிகைச்செலவு |
| அறுதியிடுதல் | - | முடிவு கட்டுதல் |
| இரண்டறக்கலத்தல் | - | முத்தியடைதல் |
| இருதலைக்கொல்லி | - | இருபக்கமும் துன்பம் |
| இளநாக்கடித்தல் | - | உடன்படாதது போல நடித்தல் |
| உதவாக்கரை | - | பயன்ற்ற |
| எடுத்துச் சொல்லுதல் | - | சிறப்பித்துச் சொல்லுதல் |
| ஏட்டுச்சுரக்காய் | - | பயன்படாத கல்வியறிவு |
| ஒருகை பார்த்தல் | - | வெல்ல முயலுதல் |
| ஓட்டைக்கையன் | - | செலாவளி |
| கச்சைக் கட்டுதல் | - | செயலை முடிக்க முனைந்து நிற்றல் |
| கட்சி கட்டுதல் | - | முரணி நிற்றல் |

| | | |
|---|---|---|
| கட்டியடித்தல் | - | தலையிற் சுமத்தல் |
| கண்காட்டி விடுதல் | - | சாடை காட்டுதல் |
| கண்மூடித்தனம் | - | அறியாமை |
| கரையேறுதல் | - | உய்வடைதல் |
| கிள்ளுக்கீரை | - | மிகவும் எளியது |
| கரையேறுதல் | - | உய்வடைதல் |
| தட்டிக் கழித்தல் | - | சாக்குப் போக்குச் சொல்லுதல் |
| தவிடுபொடியாக்கல் | - | சிதறிப்போதல் |
| நிறுத்துப் பார்த்தல் | - | மதிப்பிடுதல் |
| நீறுபூத்த நெருப்பு | - | சினத்தை வெளிக்காட்டாமை |
| நுனிப்புல் மேய்தல் | - | மேலெழுந்தவாரியாகப் படித்தல் |
| பசையடித்தல் | - | வசப்படுமாறு பேசுதல் |
| பஞ்சாய்ப்பறத்தல் | - | நிலைக்குலைந்திருத்தல் |
| படியளத்தல் | - | சீவனத்திற்கு வழிசெய்தல் |
| பதம் பார்த்தல் | - | பரிசீலித்தல் |
| புரட்டியடித்தல் | - | உண்மையை மறைத்தல் |
| புளிப்புத் தட்டுதல் | - | அலுப்புத்தட்டுதல் |
| மட்டையடித்தல் | - | வேலையின்றி அலைதல் |
| மல்லுக்கட்டுதல் | - | மோதிக்கொள்ளுதல் |
| வயிற்றிலடித்தல் | - | சீவனத்தைக் கொடுத்தல் |
| கண்ணோடுதல் | - | இரங்குதல் |
| குரங்குப்பிடி | - | பிடிவாதம் |
| கைதவறுதல் | - | தொலைந்து போதல் |
| கையடித்தல் | - | உறுதித் தருதல் |
| கையாலாகாதவன் | - | வேலை செய்யும் திறமையற்றவன் |
| கையைக் கடித்தல் | - | பொருள் நட்டமடைதல் |
| கொட்டமடித்தல் | - | குறும்பு செய்தல் |
| கோமாளிக் கூத்து | - | நகைப்பு விளைவிக்கும் செயல் |
| தட்டிக்கழித்தல் | - | சாக்குப் போக்குச் சொல்லல் |
| தட்டிக்கொடுத்தல் | - | உற்சாகப்படுத்தல் |
| தலைக்கீழாய் நிற்றல் | - | மிகச்செருக்குக் கொள்ளுதல் |
| விழலுக்கிறைத்தல் | - | வீண் பாடுபடுதல் |
| வாயில் மண் போடுதல் | - | கேடு விளைவித்தல் |
| கொடுக்குக் கட்டுதல் | - | குறித்த விடயத்தை முனைந்து நிற்றல் |
| சந்திக்கு இழுத்தல் | - | ஒருவரது குற்றங்குறைகளை பகிரங்கப்படுத்தி பழிப்பிற்கிடமாக்கல் |
| மனப்பால் குடித்தல் | - | கைகூடாதவற்றைப் பற்றி எண்ணி மகிழ்தல். |
| கொள்ளைக்கொள்ளுதல் | - | உள்ளத்தைப் பெரிதும் கவருதல் |
| தோப்புக்கரணம் போடுதல் | - | சொன்னபடியெல்லாம் செய்தல் |
| தாரைவார்த்தல் | - | தனக்குரியதை பிறருக்கு தானமாக கொடுத்தல் |
| எடுப்பார் கைப்பிள்ளை | - | யாவருக்கும் வசப்பட்டக் கூடியவர் |
| எழுத்தெண்ணிப்படித்தல் | - | ஒன்றும் விடாது படித்தல் |
| கண்ணெடுத்துப்பார்த்தல் | - | அருள் செய்தல் |
| தலைமேற்கொள்ளுதல் | - | பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் |
| திறந்து பேசுதல் | - | மனம்விட்டுச் சொல்லுதல் |
| நடுத்தெருவில் விடுதல் | - | ஆதரவின்றிக் கைவிடுதல் |

| | | |
|---|---|---|
| கட்டியடித்தல் | - | தலையிற் சுமத்தல் |
| கண்காட்டி விடுதல் | - | சாடை காட்டுதல் |
| கண்மூடித்தனம் | - | அறியாமை |
| கரையேறுதல் | - | உய்வடைதல் |
| கிள்ளுக்கீரை | - | மிகவும் எளியது |
| கரையேறுதல் | - | உய்வடைதல் |
| தட்டிக் கழித்தல் | - | சாக்குப் போக்குச் சொல்லுதல் |
| தவிடுபொடியாக்கல் | - | சிதறிப்போதல் |
| நிறுத்துப் பார்த்தல் | - | மதிப்பிடுதல் |
| நீறுபூத்த நெருப்பு | - | சினத்தை வெளிக்காட்டாமை |
| நுனிப்புல் மேய்தல் | - | மேலெழுந்தவாரியாகப் படித்தல் |
| பசையடித்தல் | - | வசப்படுமாறு பேசுதல் |
| பஞ்சாய்ப்பறத்தல் | - | நிலைக்குலைந்திருத்தல் |
| படியளத்தல் | - | சீவனத்திற்கு வழிசெய்தல் |
| பதம் பார்த்தல் | - | பரிசீலித்தல் |
| புரட்டியடித்தல் | - | உண்மையை மறைத்தல் |
| புளிப்புத் தட்டுதல் | - | அலுப்புத்தட்டுதல் |
| மட்டையடித்தல் | - | வேலையின்றி அலைதல் |
| மல்லுக்கட்டுதல் | - | மோதிக்கொள்ளுதல் |
| வயிற்றிலடித்தல் | - | சீவனத்தைக் கொடுத்தல் |
| கண்ணோடுதல் | - | இரங்குதல் |
| குரங்குப்பிடி | - | பிடிவாதம் |
| கைதவறுதல் | - | தொலைந்து போதல் |
| கையடித்தல் | - | உறுதித் தருதல் |
| கையாலாகாதவன் | - | வேலை செய்யும் திறமையற்றவன் |
| கையைக் கடித்தல் | - | பொருள் நட்டமடைதல் |
| கொட்டமடித்தல் | - | குறும்பு செய்தல் |
| கோமாளிக் கூத்து | - | நகைப்பு விளைவிக்கும் செயல் |
| தட்டிக்கழித்தல் | - | சாக்குப் போக்குச் சொல்லல் |
| தட்டிக்கொடுத்தல் | - | உற்சாகப்படுத்தல் |
| தலைக்கீழாய் நிற்றல் | - | மிகச்செருக்குக் கொள்ளுதல் |
| விழலுக்கிறைத்தல் | - | வீண் பாடுபடுதல் |
| வாயில் மண் போடுதல் | - | கேடு விளைவித்தல் |
| கொடுக்குக் கட்டுதல் | - | குறித்த விடயத்தை முனைந்து நிற்றல் |
| சந்திக்கு இழுத்தல் | - | ஒருவரது குற்றங்குறைகளை பகிரங்கப்படுத்தி பழிப்பிற்கிடமாக்கல் |
| மனப்பால் குடித்தல் | - | கைகூடாதவற்றைப் பற்றி எண்ணி மகிழ்தல். |
| கொள்ளைக்கொள்ளுதல் | - | உள்ளத்தைப் பெரிதும் கவருதல் |
| தோப்புக்கரணம் போடுதல் | - | சொன்னபடியெல்லாம் செய்தல் |
| தாரைவார்த்தல் | - | தனக்குரியதை பிறருக்கு தானமாக கொடுத்தல் |
| எடுப்பார் கைப்பிள்ளை | - | யாவருக்கும் வசப்பட்டக் கூடியவர் |
| எழுத்தெண்ணிப்படித்தல் | - | ஒன்றும் விடாது படித்தல் |
| கண்ணெடுத்துப்பார்த்தல் | - | அருள் செய்தல் |
| தலைமேற்கொள்ளுதல் | - | பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் |
| திறந்து பேசுதல் | - | மனம்விட்டுச் சொல்லுதல் |
| நடுத்தெருவில் விடுதல் | - | ஆதரவின்றிக் கைவிடுதல் |

### B. பழமொழிகள்

- அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது. (முக்கியத்துவம்)
- அடிநாக்கில் நஞ்சும், நுனி நாக்கில் அமிர்தமும். (வஞ்சகம்)
- அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும். (விடாமுயற்சி)
- அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. (ஒற்றுமையே பலம்)
- அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. (அளவை மீறல்)
- அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம். (உத்தம நட்பு)
- ஆடமாட்டாதவள் அரங்கு பிழையென்றாளாம். (விடயப்புலமையின்றி வேறொன்றைக் குறை கூறாதே)
- ஆழமறியாது காலை விடாதே. (ஆராய்ந்து செய்)
- ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை. (அற்பனுக்கு மதிப்பு)
- ஆனைக்கும் அடி சறுக்கும். (பெரியோரும் தவறலாம்.)
- ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம். (காலம் மாறி வரும்)
- இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை. (திருப்தியற்ற மனம்)
- இட்டுக்கெட்டார் எங்குமில்லை. (தருமம் செய்து கெட்டவர்கள்இல்லை)
- இளங்கன்று பயமறியாது. (வாலிபத்துணிவு)
- இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. (இளமையிற் கற்றலின் பயன்)

## 6. பிரதேசக் கிளைமொழிகளும், சமூகக் கிளைமொழிகளும்

### A. பிரதேசக் கிளைமொழி

**வடக்குப் பிரதேசக் கிளைமொழி**

| பிரதேச வழக்கு | | பொது வழக்கு |
|---|---|---|
| 01. வித்துப்போட்டான் | - | விற்றுப்போட்டான் |
| 02. அடிப்படுத்தல் | - | வெற்றிகொள்ளல் |
| 03. மாத்து | - | மாற்று |
| 04. காத்து | - | காற்று |
| 05. முத்தம் | - | முற்றம் |
| 06. குத்தம் | - | குற்றம் |
| 07. சோத்துப்பானை | - | சோற்றுப்பானை |
| 08. வெத்திலை | - | வெற்றிலை |
| 09. பெத்தவள் | - | பெற்றவள் |
| 10. கோவம் | - | கோபம் |
| 11. பாபம் | - | பாவம் |
| 12. உசிர் | - | உயிர் |
| 13. மசிர் | - | மயிர் |
| 14. வகிறு | - | வயிறு |

**கிழக்குக் கிளைமொழி**

| | | |
|---|---|---|
| 01. வாறாங்க | - | வருகிறார் |
| 02. செய்வாங்க | - | செய்வார்கள் |
| 03. போவாங்க | - | போவார்கள் |
| 04. மறுகா | - | பிறகு, பின்பு |
| 05. கிறுகி | - | திரும்பி |

| | | |
|---|---|---|
| 06. முல்லைக்காரன் | - | வயலைக்குத்தகைக்கு எடுத்துச் செல்பவன். |
| 07. வண்ணக்கர் | - | கோயிற்பரிபாலகர் |
| 08. சாமத்திய வீடு | - | சடங்குவீடு |
| 09. பந்தற்கால் | - | திருமணத்தையிட்டு நடப்படும் முள்முருங்கை மரம். |
| 10. அடுக்களை | - | சமையலறை |

**தெற்குக் கிளைமொழி**

| | | |
|---|---|---|
| 01. உறுலோசு | - | கடிகாரம் |
| 02. சல்லி | - | பணம் |
| 03. ஆப்ப | - | அப்பம் |
| 04. இடியாப்ப | - | இடியாப்பம் |
| 05. புட்டுவம் | - | கதிரை |
| 06. பள்ளி | - | பாடசாலை |
| 07. கறி | - | இறைச்சி |
| 08. கந்தூரி | - | சமய சார்பான விசேட தினங்களில் அன்னதானம் வழங்கும் வைபவம் |
| 09. மீலாத் | - | பிறந்த நாள்விழா |
| 10. மத்ராஸா | - | இஸ்லாமிய அறநெறி பாடசாலை |
| 11. கிதாப் | - | புத்தகம் |
| 12. ஷஹீப் | - | இஸ்லாத்திற்காகப் போரிட்டு வீரமரணமடைதல் |
| 13. றிஸ்க் | - | உணவு |

**மலையகக் கிளைமொழி**

| | | |
|---|---|---|
| 01. பொழப்பு | - | பிழைப்பு |
| 02. பொணம் | - | பிணம் |
| 03. புள்ளே | - | பிள்ளை |
| 04. ஒரல் | - | உரல் |
| 05. எலை | - | இலை |
| 06. அங்கிட்டு | - | அங்கே |
| 07. இங்கிட்டு | - | இங்கே |
| 08. எங்கிட்டே | - | என்னிடம் |
| 09. அம்புட்டு | - | அவ்வளவு |
| 10. அப்புறம் | - | அதற்குபின்பு |

## B. சமூகக் கிளைமொழிகள்

**விவசாயச் சமூகம்**

| | | |
|---|---|---|
| 01. நடையன் | - | சூடுமிதிக்கும் எருதுகள் |
| 02. உப்பட்டி | - | அறுவடை செய்யப்பட்ட அருவக் கூறுகள் |
| 03. குல்லம் | - | சுளகு |
| 04. களக்கட்டை | - | சூடுமிதித்தலின் போது எருதுகள் இணைக்கப்படும் நடுதடி |
| 05. கேட்டி | - | எருதுகளை விரட்டும் சிறுதடி |
| 06. பொலிக்கொடி | - | வைக்கோல் |
| 07. கோல் | - | சாணம் |
| 08. நாட்டான் | - | மேற்புறம் அகன்றும், கீழ்ப்புறம் ஒடுங்கியுமுள்ள மண்வெட்டி |
| 09. பிக்கான் | - | சற்சதுரமாகவோ நீள்சதுரமாகவோ அமைந்துள்ள மண்வெட்டி |
| 10. கொத்துகள் | - | ஆழமாக மண்ணைக் கிளறுதல். |
| 11. கட்டை பிடுங்குதல் | - | மரம், செடி, கொடிகளிலுள்ள நிலத்தைக் கொத்தி பண்படுத்தல். |

**மீனவச் சமூகம்**

| | | |
|---|---|---|
| 01. கட்டு மரம் | - | சிறுதோணி |
| 02. கரைவலை | - | கரையோரங்களிற் பயன்படுத்தப்படும் வலை |
| 03. கென்மீன்கூடு | - | தென்னை ஈர்க்கினாற் செய்யப்படும் மீன் பிடிப்பதற்கான கூடு |
| 04. எறிவலை | - | வலைவீசி மீன்பிடித்தல், இதனை வீச்சுவலை எனவும் கூறுவர் |
| 05. மண்டா | - | மீன்குத்தும் தடி |
| 06. அட்டாளை | - | 3 அல்லது 4 அடி உயரமாக அமைக்கப்படும் மேசை வடிவில் அ... |
| 07. அம்மாறு | - | கொந்தளிப்பு |
| 08. கொண்டல் | - | கிழக்குத்திசையிலிருந்து வீசும் காற்று |
| 09. செக்கல் | - | இருள் சூழும் மாலை நேரம் |
| 10. கச்சான் | - | மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்று. |
| 11. வெள்ளிடி | - | துக்க சம்பவம் |
| 12. ஆலாப்பறத்தல் | - | அவசரப்படுதல் |
| 13. செட்டுப்பிடிச்சவன் | - | ஆணவமுள்ளவன் |
| 14. ஆத்துப்பறக்க | - | மிகவும் விரைவாக |
| 15. அணியம் | - | மரக்கலத்தில் துடுப்பு வலிப்பவர் இருக்கும் இடம் |

## வழுக்களும் திருத்தங்களும்

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ♦ வேர்வை | - வியர்வை | ♦ உசிர் | - உயிர் |
| ♦ கோர்வை | - கோவை | ♦ வகிறு | - வயிறு |
| ♦ சேதி | - செய்தி | ♦ வேணும் | - வேண்டும் |
| ♦ உடமை | - உடைமை | ♦ பிடவை | - பிடைவை |
| ♦ அப்ப | - அப்பொழுது | ♦ இப்ப | - இப்பொழுது |
| ♦ சிவர் | - சுவர் | ♦ வாறார் | - வருகிறார் |
| ♦ கோடரி | - கோடரி | ♦ விதரம் | - விரதம் |
| ♦ சிலது | - சில | ♦ சிகப்பு | - சிவப்பு |
| ♦ புத்து | - புற்று | ♦ கடசி | - கடைசி |
| ♦ ஊந்து | - ஊர்ந்து | ♦ நிலமை | - நிலைமை |
| ♦ புட்டு | - பிட்டு | ♦ பெரிசு | - பெறிது |
| ♦ ஈக்கு | - ஈர்க்கு | ♦ தீவட்டி | - தீவர்த்தி |
| ♦ முளகாய் | - மிளகாய் | ♦ சுறுட்டு | - சுருட்டு |
| ♦ வாளைப்பழம் | - வாழைப்பழம் | ♦ பிலாப்பழம் | - பலாப்பழம் |
| ♦ வெத்திலை | - வெற்றிலை | ♦ அண்டைக்கு | - அன்றைக்கு |
| ♦ மாதாளை | - மாதுளை | ♦ மம்பெட்டி | - மண்வெட்டி |
| ♦ பொம்பிளை | - பெண்பிள்ளை | ♦ தண்ணி | - தண்ணீர் |
| ♦ புண்ணாக்கு | - பிண்ணாக்கு | ♦ திருவுதல் | - துருவுதல் |
| ♦ தாவாரம் | - தாழ்வாரம் | ♦ கதியால் | - கதிகால் |
| ♦ கருவேப்பிலை | - கறிவேப்பிலை | ♦ பதிஞ்சது | - பதிந்தது |
| ♦ வித்தபணம் | - விற்றப்பணம் | ♦ தவக்கை | - தவளை |
| ♦ போயிலை | - புகையிலை | ♦ அவன்கள் | - அவர்கள் |
| ♦ அதுகள் | - அவைகள் | ♦ ஆத்தங்கரை | - ஆற்றங்கரை |
| ♦ அதர்க்கு | - அதற்கு | ♦ உயற்சி | - உயர்ச்சி |
| ♦ முயர்ச்சி | - முயற்சி | ♦ தேற்சி | - தேர்ச்சி |
| ♦ பயிர்ச்சி | - பயிற்சி | ♦ சமயல் | - சமையல் |

- பன்ரண்டு - பன்னிரண்டு
- துப்பரவு - துப்புரவு
- சக்கரை - சர்க்கரை
- பாற்ச்சோறு - பாற்சோறு
- தீபாளி - தீபாவளி
- மீட்ச்சி - மீட்சி
- தாட்சி - தாழ்ச்சி
- செய்நன்றி - செய்ந்நன்றி
- அடமழை - அடைமழை
- அங்கை - அங்கு, அங்கே
- ஈய்ந்தான் - ஈந்தான்
- உத்திரவு - உத்தரவு
- எகனை - எதுகை
- எண்ணை - எண்ணெய்
- ஏப்பை - அகப்பை
- ஒண்டியாய் - ஒன்றியாய்
- ஒருக்கால் - ஒருகால்
- கண்ணாளம் - கலியாணம்
- கதியால் - கதிகால்
- காச்சல் - காய்ச்சல்
- கார்க்கும் - காக்கும்
- கிராணம் - கிரகணம்
- குண்டுமணி - குன்றிமணி
- சந்தணம் - சந்தனம்
- சித்தரித்தல் - சித்திரித்தல்
- சிலவு - செலவு
- பயத்தங்காய் - பயிற்றங்காய்
- முன்னூறு - முந்நூறு
- பாவக்காய் - பாகற்காய்
- புடலங்காய் - புடோலங்காய்
- பொக்குள் - கொப்பூழ்
- சுடுதண்ணி - வெந்நீர், சுடுநீர்
- சுற்றவாளி - சுத்தவாளி
- சொற்பணம் - சொப்பனம்
- தேனீர் - தேநீர்
- நாகரீகம் - நாகரிகம்
- நாப்பது - நாற்பது
- நிலமை - நிலைமை
- திரேகம் - தேகம்
- நோம்பு - நோன்பு
- அருகாமை - அருகு, அருண்மை
- அண்டைக்கு - அன்றைக்கு, அன்று
- அதுகள் - அவை, அவைகள்
- அப்ப, அப்போ - அப்போது, அப்பொழுது
- அரணாக்கயிறு - அரைஞான்
- அறுணாக்கொடி - அரைஞான் கயிறு
- சமையம் - சமயம்
- பேத்தி - பேர்த்தி
- தேள்வை - தேவை
- வெய்யில் - வெயில்
- மாட்ச்சி - மாட்சி
- இகழ்சி - இகழ்ச்சி
- வீட்சி - வீழ்ச்சி
- வெண்காயம் - வெங்காயம்
- அடமானம் - அடைமானம்
- அருவாள் - அரிவாள்
- உடமை - உடைமை
- ஊறணி, ஊரணி - ஊருணி
- எங்கை - எங்கு, எங்கே
- எழவு - இழவு
- ஒட்டறை - ஒட்டடை
- ஒத்தனம் - ஒற்றடம்
- ஒருவள் - ஒருத்தி
- கத்திரி - கத்தரி
- கம்பிளி - கம்பளி
- காஷி - காட்சி
- கிணத்தடி - கிணற்றடி
- கினவு - கனவு
- கைமாத்து - கைம்மாற்று
- சம்மந்தம் - சம்பந்தம்
- சிலது - சில
- சீக்காய் - சிகைக்காய்
- பலது - பல
- வெண்டி - வெண்டை
- புஞ்சை - புன்செய்
- பூசனி - பூசணி
- பொண்ணு - பெண்
- சுதந்தரம் - சுதந்திரம்
- சேதி - செய்தி
- தலகணி - தலையணை
- நஞ்சை - நன்செய்
- நாத்தம் - நாற்றம்
- நிட்சயம் - நிச்சயம்
- நேத்து - நேற்று
- தீவட்டி - தீவர்த்தி
- புச்சைத்தண்ணி - தண்ணீர்

- அடகு வைத்தல் - அடைவு வைத்தல்
- போறதேங்காய் - போர்த்தேங்காய்
- போற்தேங்காய் - போர்த்தேங்காய்
- அடமானம் - அடைமானம்
- அருவாமனை - அரிவாள்மனை
- அவங்கள், அவங்க - அவர்கள்
- அறுதலி - அறுதாலி (தாலி அறுத்தவள், கைம்பெண்)
- ஆக்கள் - ஆட்கள், ஆள்கள்
- ஆப்பிட்டுக்கிட்டான் - அகப்பட்டுக்கொண்டான்
- ஆம்பிளைப்பிள்ளை - ஆண்பிள்ளை
- ஆராட்சி, ஆராச்சி - ஆராய்ச்சி
- இஞ்சை, இங்கை - இங்கு, இங்கே
- இடது பக்கம் - இடப்பக்கம்
- இப்ப, இப்போ - இப்போது, இப்பொழுது
- இளனி - இளநீர் (தெங்கின் இளங்குரும்பை)
- இன்னிக்கு, இண்டைக்கு - இன்று, இன்றைக்கு
- என்னமோ, என்னம்போ - என்னவோ
- ஈக்கு, ஈக்கில் - ஈர்க்கு, ஈர்க்கில்
- சுகயினம் - சுகவினம்
- தவக்கை, தவக்களை - தவளை
- திருவலை - துரவலகு, துருவுபலகை
- தேங்காய் திருவுதல் - தேங்காய் துருவுதல்
- பன்ரெண்டு, பனிரெண்டு - பன்னிரண்டு
- பொம்மினாட்டி - பெண்பிள்ளை
- மண்ணெண்ணை - மண்ணெண்ணெய்
- முழிக்கிறான் - விழிக்கிறான்

## 7. தொடர்மொழிக்கு ஒரு மொழி

நீண்ட பல தொடரால் உணர்த்தும் பொருளை ஒரு சொற் பிரயோகித்து உணர்த்துவது மொழி நடைக்கு ஆற்றலு வனப்பும் அளிக்கும். அன்றியும், அத்தகைய சொற்களின் அறிவு பொருட்சுருக்கம் எழுதும்போது மிகுந்த பயனளிக்கு

- அகராதி - சொற்களை அகரவரிசைப்படி குறிப்பிட்டு அவற்றின் பொருளைக் கூறும் நூல்.
- அகாலமரணம் - வயோதிபம் அடைந்து இறக்காமல் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் இடையிலே மரண சம்பவித்தல்.
- அங்கதம் - வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும், மறைபொருளில் இகழ்ந்தும் கூறுதல்.
- அரங்கேற்றம் - அறிஞர் பலர் கூடியுள்ள சபையில் நடுவே புதிதாக ஆக்கப்பட்ட நூலையோ அல்லது ஒரு கலை நிகழ்வை படித்தோ அல்லது செய்து காட்டியோ அச்சபையினை ஏற்றுக் கொள்ளச் செய்தல்.
- அஞ்ஞாதவாசம் - பிறர் தம்மை இன்னார் என்று அறியாதவாறு மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியி வசித்தல்.
- அட்டாவதானி - ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.
- அணிந்துரை - ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த பிறர் வழங்கும் புகழுரை.
- அந்தப்புரம் - அரண்மனையில் மகளிர் தங்குவதற்காக அமைக்கப்பட்ட தனி இடம்.
- அல்லங்காடி - மாலை அல்லது இரவில் கூடும் சந்தை.
- அழைப்பானை - குறித்த ஒரு நாளில் நீதிமன்றுக்கு சமூகம் தரும்படி நீதிபதியால் விடுவிக்கப்படு அதிகார பூர்வமான கட்டளை.

- அசகாயசூரன் - யார் துணையுமின்றித் தானே தனி நின்று பகைவரை வெல்லும் திறன் படைத்தோன்.
- அநாதவர் - தாய் தந்தையரை இழந்தோர்.
- அவிசு (அவி) - வேள்வியிலே தேவர்களுக்குச் சமர்ப்பிக்கும் உணவு உப்பின்றிச் சமைத்த பச்சை அரிசிச் சாதம்
- அறம்பாடுதல் - பிறருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியனவான சொற்களையும் சொற்றொடர்களையும் சேர்த்துக் கவிபாடல்
- ஆவணம் (உறுதி) - உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த பத்திரம்
- ஆச்சிரமம் - துறவிகள் வசிக்கும் இடம்.
- ஆத்திகன் - கடவுள் இருக்கின்றார் என நம்புபவன்.
- ஆதனம் - ஒருவருக்குரிய நிலம் முதலிய சொத்துக்கள்.
- ஆதுலர்சாலை - வறியவர்க்கும், அங்கவீனர்களுக்கும், முதியோர்களுக்கும் உண்டியும், உறையுளும் அளித்து ஆதரிக்கும் இடம்.
- ஆவணம் - நிலத்தின் உரிமை கொண்டாடுவதற்குச் சான்றாக எழுத்துருவில் அமைந்த உறுதி.
- இடக்கரடக்கல் - சபையில் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு வகையில் சொல்லுதல்.
- இராக்கதம் - பெண்ணும் சுற்றமும் உடன்படாமல் வலிந்து கொள்ளும் மணம்.
- ஈமக்கிரியை - ஒருவர் இறந்ததன் பின்னர் செய்யப்படும் சமய சம்பந்தமான இறுதிக்கிரியைகள்
- உலோகாயுதம் - உலகமும் உலக இன்பங்களும் மாத்திரமே மெய்யென்றும் கடவுளோ மறுமையோ இல்லையென்றும் வாதிப்பவர்.
- உப்பரிகை - செல்வர் வீடுகளில் மகளிர் முதலியோர் ஓய்வு நேரங்களில் கூடியிருந்து பொழுது போக்குவதற்றகாக அமைக்கப்பட்ட மேல் மாடம்.
- உயர்வு நவிற்சி - ஒரு பொருளைப்பற்றி கேட்போர் மகிழுமாறு உயர்த்திக் கூறுதல்.
- உரைகல் - பொன்னை உரைத்து அதன் உபயோகப்படும் ஒரு வகைக் கல்.
- உவமானம் - ஒரு பொருளுக்கு ஒப்பாக எடுத்துச் சொல்லப்படும் மற்றொரு பொருள்
- ஊதாரி - கண்மூடித்தனமாகப் பணத்தை வீணே செலவு செய்பவன்.
- எதுகை - அடிதோறும் செய்யுட் சீர்களின் அல்லது வாக்கியத்தில் சொற்களின் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொகுப்பது.
- எய்ப்பில்வைப்பு - முதுமைக்காலத்தேவைகளுக்காகச் சேமித்து வைக்கப்படும் பொருள்.
- ஏகபோகம் - ஒருவர் முழுப்பொருளையும் தானே தனித்து அனுபவித்தல்.
- ஏற்றப்பாட்டு - நீர் இறைக்கும் போது பாடப்படும் பாட்டு
- ஐம்பூதம் - நிலம், நீர், தீ, வளி, வான் முதலியன.
- ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.
- ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து உணர்வுகள்
- ஒப்பாரி - ஒருவர் இறந்த பின்னர் அவரின் உறவுப் பெண்கள் அவரை நினைத்துப் புலம்புதல்.
- ஒப்புரவு - உலக நடையறிந்து ஒழுகுதல்
- ஒட்டுண்ணி - மற்றோர் உயிர்ப்பொருளிலிருந்து தன் உணவை உறிஞ்சி வாழும் பிராணி அல்லது தாவரம்
- ஒற்றி - சொத்தை அனுவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்
- ஓலக்கம் - அரசன் சபா மண்டபத்திலே அமைச்சர், படைத்தலைவர் அறிஞர் முதலிய பரிவாரத்தினர் சூல வீற்றிருக்கும் இடம்
- ஓம்படை - பேணிப்பாதுகாத்துத்தருமாறு ஒருவரை இன்னொருவரிடம் ஒப்படைத்தல்.
- கலைக்களஞ்சியம் - அறிவுத்துறைகள் பற்றிய விடயங்களைத் தொகுத்தும் வகுத்தும் அகரவரிசைப்படி திரட்டித் தருவது
- கண்டம் - நீர் சூழ்ந்த பெரிய நிலப்பரப்பு
- கட்டியம் - கடவுள், அரசர் என்போர் உலாவரும் போது அவரது விருதுப் பெயர் வெற்றி முதலியவற்றை எடுத்துக் கூறுதல்.
- களஞ்சியம் - பொருள் பண்டங்களைச் சேகரித்து வைக்குமிடம்
- கன்னிக்கவிதை - ஒருவர் முதன் முதலில் இயற்றிய கவிதை

- கன்னிவேட்டை - அரசகுமாரன் காட்டிற்குச் சென்று முதன் முதல் நிகழ்த்தும் வேட்டை
- காவற்காடு - கோட்டையைச் சேர்ந்துள்ள அகழிக்கு வெளியே அரணாய் அமைந்த கா...
- காசேடு - காசு சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்குரிய குறிப்புப் புத்தக...
- கால்கோள் விழா - யாதாயினும் ஒன்றைத் தொடங்குவதற்காக எடுக்கப்படும் விழா
- குரவர் - அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன் என்போர்.
- குருகுலவாசம் - மாணாக்கர் ஆசிரியருடன் தங்கியிருந்து கல்வி பயிலுதல்
- குழூஉக்குறி - ஒரு கூட்டத்தார் பிறர் அறியாதபடி ஒரு பொருளுக்குரிய பெயரை மறைத்து வே... பெயரால் குறிப்பிடுவது
- குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
- கூலிப்படை - ஒரு பகுதியனருக்காக கூலி பெற்றுக்கொண்டு போரிடும் படை
- கூழைப்படை - போர்க்களத்தில் பலவகைப்பட்ட படைவகுப்புக்களின் இறுதியில் நிற்கும் படை
- கைம்மருந்து - ஒருவர் வைத்தியனின்றித் தாமே தமது நோய்க்குச்செய்யும் மருந்து
- கையுறை - குரு, பெரியார் குழந்தைகள் ஆகியோரை காணச்செல்வோர் கொண்டுச்செ... உபகாரப் பொருள்
- கையூட்டு - ஒரு கருமத்தை எளதில் நிறைவேற்றும் பொருட்டு அதனோடு தொடர்... யவர்களுக்கு வழங்கப்படும் இலஞ்சப்பணம்
- சகாப்தம் - நூறு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி
- சதாவதனி - ஒரே நேரத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் உடையவன்
- சரணாகதி - வேறு துணையில்லாத விடத்து ஒருவரிடம் தன்னை ஒப்படைத்தல்.
- சங்கதி - இலட்சங்கோடி அளவுடைய நிதி
- சால்பு - அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் குணங்களைச் சே... பண்பு.
- சாசனவியல் - கல்லிலோ, செப்பேடுகளிலோ எழுதப்பட்ட எழுத்துக்களை வாசிக்கவும் அவ... பொருளினை விளங்கிக் கொள்ளவும் உருவாகிய கலை
- சிரஞ்சீவி - நெடுங்காலம் வாழ்பவன்
- சிறுபட்டி - கட்டுக்கடங்காத இளைஞன்
- சுயம்பு - ஒருவராலும் படைக்கப்படாது தானே தோன்றியது
- சுயம்வரம் - கன்னியொருத்தி ஆடவர் கூடிய சபையில் தான் விரும்பிய ஆடவனைத் தெ... மாலையிடுதல்
- செய்குன்று - அரசர்களுக்குரிய சோலையில் செயற்கையாக அமைக்கப்பட்ட சிறு குன்று
- சூழுரைத்தல் - யான் இதனை இயற்றாவிடின் இதனைச் செய்வோன் என்று ஆணையிட்டுரை...
- செங்கோன்மை - அரசனுடை நீதி தவறாத ஆட்சி
- செவிலி - வளர்ப்புத்தாய்
- தசாப்தம் - பத்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதி
- தசாவதானி - பத்து விடயங்களை ஒரே நேரத்தில் அவதானிக்கும் உள்ளவன்
- தட்சணை - ஒரு கிரியை முடிவில் அதனை நடாத்தி வைத்த குருவுக்கு கொடுக்கும் சன்...
- தபுதாரன் - மனைவியை இழந்தவன்
- தபோவனம் - துறவறம் பூண்ட தூயோர் ஒதுங்கி வாழும் இடம்
- தலைமுறை - ஒருவர் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையுள்ள காலப்பகுதி
- தற்பவம் - ஆரியத்திற்குரிய சிறப்பெழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களாக விகாரப்பட்டு தமி... வழங்கப்படும் வடசொல்
- தற்சமம் - ஆரியத்திற்கும் தமிழுக்கும் பொது எழுத்துக்களாகி விகாரமின்றித் தமிழில் வழங்... வடசொல்
- தாசமார்க்கம் - இறைவன் ஆண்டானகவும், தன்னை அடியானாகவும் கருதி வழிப்படும் முறை
- திறைசேரி - அரசின் சம்பந்தமான விடயங்களை செயற்படுத்தப்படும் இடம்.
- தீர்க்கதரிசி - எதிர்கால நிகழ்ச்சிகளை எதிர்வு கூறும் ஆற்றல் படைத்தவன்.
- தூசிப்படை - போர்க்களத்தில் அணிவகுப்பில் முதல் வரிசையிலே நிற்கும் படை

- ♦ தேசாபிமானி - தான் பிறந்த நாட்டை நேசிப்பவன்
- ♦ தேடற்கட்டளை - ஓர் இடத்தில் ஆட்களையோ சாதனங்களையோ பிரசுரங்களையோ தேடுவதற்கு நீதிமன்றம் விடுவிக்கும் ஆணை
- ♦ தேவராளன் - வேண்டிய போது தெய்வம் ஏறப்படும் ஆடுவோன்.
- ♦ பட்டிமன்றம் - அறிஞர் கூடி வாதிடுங் களம்
- ♦ பதுமநிதி - தாமரை உருவிலான திரவியமளிக்கும் பொருள் சங்கநிதியின் ஆயிரம் மடங்கு நிதி
- ♦ பஞ்சாங்கம் - திதி, வாரம், கரணம், யோகம், நட்சத்திரம் என்னும் ஐந்து உறுப்புக்களையும் பற்றிய விரங்களைத்தரும் நூல்
- ♦ பஞ்சமாபாதகம் - கொலை, களவு, பொய், குரு, நிந்தை எனும் பாவங்கள்
- ♦ பதிப்புரை - ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் அந்நூலை பற்றி எழுதும் உரை
- ♦ பரிவேடம் - சூரிய சந்திரர்களைச் சுற்றித் தோன்றும் ஒளிவட்டம்
- ♦ பவளவிழா - எழுபத்தைந்து ஆண்டுகள் முடிவடையும் போது எடுக்கப்படும் விழா
- ♦ பன்னசாலை - முனிவர் வசிப்பதற்கு இலை, தழை, கொண்டு வேயப்படும் குடிசை.
- ♦ பாஞ்சன்யம் - சலஞ்சலம் என்னும் பெயருடைய ஆயிரம் சங்குகளின் நடுவேயிருக்கும் உயர்சாதிச் சங்கு
- ♦ பால்வீதி - வானத்தின் ஒரு புறத்தின் வெண்ணிற நீட்சியாகத் தோன்றும் நட்சத்திரளின் ஒளி
- ♦ பிதிர்க்கடன் - இறந்தவர்களைக் குறித்துச் செய்யப்படும் சிரார்த்தம் முதலிய கடன்கள்.
- ♦ புருடார்த்தம் - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்கள்
- ♦ புறஞ்சேரி - நகருக்கு வெளியே மக்கள் வாழும் இடம்
- ♦ புனைந்துரை - இல்லது இனியது நல்லதைப் புனைந்து கூறுதல்
- ♦ பொதுவியல் - பொதுமக்களுக்காக அரங்கிலே ஆடப்படும் கூத்துவகை
- ♦ பொன்விழா - ஐம்பதாவது ஆண்டு முடிவிலே எடுக்கும் விழா
- ♦ போலி - ஒன்று போல இருக்கும் வேறொன்று
- ♦ பௌராணிகர் - புராணக்கதைகளை சுவைப்படப் பிரசங்கம் செய்வோன்.
- ♦ நடுகல் - போரில் வீரமரணம் எய்திய போர் வீரரின் பெயரையும் புகழையும் எழுதி நாட்டப்படும் கல்
- ♦ நாளங்காடி - காலையிலாயினும், பகலிலாயினும் கூடும் சந்தை.
- ♦ நிறைமொழி - அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களை பயந்தே விடும் அருண்மொழி
- ♦ நிகண்டு - சொற்களில் பொருளைச் செய்யுள் வடிவில் திரட்டித்தரும் நூல்
- ♦ நிந்தகம் - அரசரும் செல்வரும் தமக்குக் கீழே சேவை புரிவோருக்கு வழங்கும் நிலம்
- ♦ நிலுவை - செலுத்திய தொகையை நீக்கி இன்னும் செலுத்தப்படவேண்டிய தொகை
- ♦ நுண்முகம் - நூலாசிரியர் தமது நூலை பற்றி நூல் முகப்பில் எழுதும் உரை
- ♦ நூலகம் - வாசிப்பதற்காக நூல்களைத் தொகுத்து வைத்திருக்கும் இடம்
- ♦ நூதனசாலை - புராதனப் பொருட்களைச் சேகரித்து வைக்குமிடம்
- ♦ நெடுங்கணக்கு - தமிழிலுள்ள இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களும் ஒழுங்கு முறைப்படி அமையப்பெற்றது.
- ♦ நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
- ♦ நெட்டிகன் - ஆயுள் முழுவதும் பிரமச்சாரியாக விரதங்காத்து வாழ்பவன்
- ♦ நொதுமலர் - பகையுமின்றி நட்புமின்றி நடுநிலையில் நிற்போர்
- ♦ மந்திரம் - நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழி
- ♦ மஞ்சரி - ஒரு தண்டிலே பல மலர்கள் சேர்ந்துள்ள பூங்கொத்து
- ♦ மணிவிழா - அறுபதாம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா
- ♦ மரபு - தொன்றுதொட்டு வழங்கிவரும் சிறப்பு
- ♦ மாராயம் - மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு

- மானியம் - அரசர்கள் தமக்குக் கீழ் வாழ்வோருக்குச் சன்மானமாக விடும் நிலம். அரசு மக்களின் நலன் கருதி வழங்கும் உதவித் தொகை.
- முற்றுகை - ஒரு நாட்டுக்கு வெளியேயிருந்து உணவு முதலிய எவ்வித பொருளும் கிடைக்காதவாறு தடுத்து அந்நாட்டை படை கொண்டு நாட்புறமும் சூழ்ந்து நிற்றல்.
- மெய்க்கீர்த்தி - கல்லிலேனும் செப்பேட்டிலேனும் பொறிக்கப்படும் ஒருவருடைய புகழ்.
- மெய்ப்பாடு - மனதில் நிகழும் நகைப்பு முதலான எட்டு வகைச் சுவைகளையும் புறத்துள்ளாருக்கும் புலப்படுமாறு தோற்றுவித்தல்.
- மோனை - செய்யுட் சீர்களின் முதலெழுத்து ஒன்றிவர அமைப்பது.
- வடக்கிருத்தல் - உயிர் துறக்கும் துணிவுடன் வடதிசை நோக்கி உண்ணாதிருத்தல்
- வஞ்சிப்போர் - மண்ணாசை கொண்டு ஒரு மன்னன் மற்றொரு மன்னன் மீது தொடுக்கும் போர்
- விகடகவி - நகையும் பரிகாசமும் சேர்ந்துவர கவிபுனையும் ஆற்றல் படைத்தவன்.
- வெள்ளிவிழா - இருபத்தைந்தாவது ஆண்டு இறுதியில் எடுக்கப்படும் விழா
- வெள்ளோட்டம் - புதிதாகச் செய்யப்பட்ட கப்பல்
- ஜெயந்தி விழா - வருடம் தோறும் ஒருவர் பிறந்த நாளன்று எடுக்கப்படும் விழா போன்றவற்றை முதல் முதலில் செலுத்திப் பார்த்தல்.

## 8. இளமைப்பெயர், சினைப்பெயர், பிற மரபுப் பெயர்

### A. இளமைப்பெயர்

- நாய் - குட்டி, குருளை, பறழ்
- பூனை - குட்டி
- மான் - கன்று, குட்டி
- முயல் - குட்டி, பிள்ளை
- பன்றி - குட்டி, பறழ்
- புலி - குட்டி, குருளை
- மாடு - கன்று
- யானை - கன்று, குட்டி, போதகம்
- பாம்பு - குட்டி
- மீன் - குஞ்சு
- பனை - வடலி
- வாழை - கன்று, குட்டி
- நெல் - நாற்று
- மக்கள் - குழவி, குழந்தை பிள்ளை, மகவு, பாப்பா

**கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள்**

- அறிஞர் அவை
- ஆட்டு மந்தை
- ஆநிரை, ஆனிரை (ஆ, ஆன்)
- உடுத்திரள்
- உயிர்த்தொகுதி
- ஊர்மக்கள் மன்றம்
- எண்பேர் ஆயம்

- ஐம்பெருங்குழு
- கள்வர் கூட்டம்
- குண்டர் கும்பல்
- சனக்கூட்டம், திரள்
- தோழியர் ஆயம்

## B. சினைப் பெயர்

**இலைக்குரிய மரபுப் பெயர்**

இலை - மா, பலா, வாழை முதலியன

ஓலை - தென்னை, பனை, கமுகு, ஈஞ்சு, தாழை முதலியன

தாள் - நெல், புல்

**பிஞ்சுக்குரிய மரபுப் பெயர்**

கச்சல் - வாழை இளம் பிஞ்சு

குரும்பை - தென்னை இளங்காய்

நுங்கு - பனையின் இளங்காய்

வடு - மாவின் இளம் பிஞ்சு

மூசு - பலாவின் பிஞ்சு

**குலைக்குரிய மரபுப் பெயர்**

குலை - வாழை, முந்திரி, ஈஞ்சு முதலியவற்றின் காய்த்தொகுதி

கொத்து - மா, புளி முதலியவற்றின் காய்த்தொகுதி

கதிர் - நெல், சோளம் முதலிய பயிர்களின் மணித்தொகுதி.

தாறு - வாழைக்குலை

**வித்துக்குரிய மரபுப் பெயர்**

கொட்டை - மா, பலா, புளி முதலியவற்றின் வித்து

மணி - நெல், சோளம் முதலியவற்றின் வித்து

முத்து - ஆமணக்கு முதலானவற்றின் வித்து

விதை - கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து

மா, பலா, புளி

**உள்ளீட்டுக்குரிய மரபுப் பெயர்**

அரிசி - நெல், கம்பு, வரகு, தினை முதலிய தானியங்களின் உள்ளீடு.

சதை - மா, வாழை முதலிய பழத்தின் உள்ளீடு

சுளை - பலா, தோடை முதலிய பழத்தின் உள்ளீடு

பருப்பு - அவரை, துவரை, பயறு முதலிய விதையின் உள்ளீடு.

## C. பிற மரபுப் பெயர்கள்

- ஆட்டு மலம் - பிழுக்கை
- கழுதை மலம் - விட்டை
- பறவை மலம் - எச்சம்
- மாடு, எருமை ஆகியவற்றின் மலம் - சாணம்
- யானை, குதிரை, ஒட்டகம் முதலியவற்றின் மலம் - இலத்தி, இலண்டம்

- ஆடு மேய்ப்பவன் - இடையன்
- ஆ, (பசு) மேய்ப்பவன் - ஆயன், இடையன்
- குதிரை, யானை, தேர் செலுத்துபவன் - பாகன்
- கப்பல் செலுத்துபவன் - மீகாமன்

## பிராணிகளின் ஆண் - பெண் மரபுப் பெயர்

| பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|
| மாடு | எருது | பசு |
| ஆடு | கடா | மறி |
| நாய் | கடுவன் | பெட்டை |
| பூனை | கடுவன் | பெட்டை |
| கோழி | சேவல் | பேடு |
| குதிரை | மா | வடவை |
| யானை | களிறு | பிடி |
| குரங்கு | கடுவன் | மந்தி |
| அன்னம் | சேவல் | பெடை |


## பிராணிகளின் ஒலி மரபு

- ஆடு - கத்தும்
- பூனை - கத்தும்
- கிளி - பேசும்
- கோழி - கொக்கரிக்கும்
- நாய் - குரைக்கும்
- யானை - பிளிறும்
- புலி - உறுமும்
- கழுதை - கத்தும்
- குதிரை - கனைக்கும்
- காகம் - கரையும்
- குயில் - கூவும்
- மயில் - அகவும்
- அணில் - கீச்சிடும்
- பாம்பு - சீறும்
- வண்டு - இரையும்
- தவளை - கத்தும்
- பசு - கதறும்
- சேவல் - கூவும்
- நரி - ஊளையிடும்
- கரடி - கத்தும்
- சிங்கம் - கர்ச்சிக்கும்
- ஆந்தை - அலறும்
- பல்லி - சொல்லும்

# OUR SLAS GROUP



General Knowledge









S.PRASHANTHAN